# போயு திபெத்தியர்கள் (Tibetans, Boyu)



**வசிப்பிடம்:** வறுமை நிறைந்த கன்சு (Gansu) மாகாணத்தின் காணன் (Gaanan) மாவட்டத்தின் சுக்சு (Zhugqu) கோட்டத்திற்கு உட்பட்ட போயு (Boyu) கிராமத்தில் திபெத்திய போயுக்கள் வசிக்கின்றனர். இவர்கள் 3000 மீட்டர்கள் (9840 அடி) உயரமுடைய மலையுச்சியில் வசிக்கின்றனர். போயு கிராமம் உயரமான சிகரங்கள் மற்றும் செங்குத்தான பள்ளத்தாக்குகள் மத்தியில் உள்ளது. இவர்கள் கடந்து செல்லும் வழி மலர்களாலும், தேய் செடிகளாலும், ரோடோடென்ரான் செடிகளாலும், இளஞ்சிவப்பு மலர்ச்செடி வகைகளாலும், கோஜி (Goji Berry) பழங்களாலும் நிறைந்து பிரமாண்டமாகக் காட்சியளிக்கிறது.

**அடையாளம்:** போயு மக்கள் மற்ற திபெத்தியர்களைக் காட்டிலும் மொழி மற்றும் கலாச்சாரத்தில் வித்தியாசமானவர்கள். ஒருவர் இவர்களைப் பற்றி இவ்வாறு விவரிக்கிறார் “ இவர்களுடைய மொழி மற்றும் உடை மற்றெல்லாத் திபெத்தியர்களைக் காட்டிலும் வேறுபட்டது. பண்டிகை நாட்களில் போயு பெண்கள் விசேஷமான மற்றும் தனித்தன்மையான உடையணிகிறார்கள். ஐந்து அல்லது ஆறாயிரம் இளஞ்சிவப்பு பாசிமணிகளைக் கோர்த்துச் செய்யப்பட்ட பாசிமணி மார்க்கவசம் மற்றும் மிகவும் பெரிய அதிக எடையுள்ள வெள்ளிப் பதக்கத்தை அணிகிறார்கள். இந்தப் பதக்கத்தில் புத்தமதத்தைச் சார்ந்த சின்னங்கள் மற்றும் தாயத்து வேலைப்பாடாகக் காணப்படும். இதை அணியும்போது அசுத்த ஆவிகள் அணுகாதென்பது இவர்களுடைய நம்பிக்கை.

**மொழி:** காணன் மாவட்டத்தில் போயு இனமக்கள் மற்ற திபெத்தியர்களைக் காட்டிலும் மாறுபட்ட காலத்தில் தங்களுடைய வித்தியாசமான மொழியுடன் வந்து சேர்ந்தார்கள். இம்மொழி திபெத்திய பர்மிய மொழிப் பிரிவின் கிளை மொழியாகிய ஷியங் (Qiangic) மொழியிலிருந்து வந்ததாக இருக்கக்கூடும்.

**வரலாறு:** போயு பெண்களின் உடை கி.பி. 629ல் சொங்ஸ்சென் கம்பொ (Songsten Gampo) ராஜாவால் ஸ்தாபிக்கப்பட்ட இருநூறு ஆண்டுகள் நிலைத்த திபெத்திய சாம்ராஜ்யத்தின் துபொ(Tupo) ராணுவத்தோடு தொடர்புடையதாகக் கருதப்படும். பழமையான கதைகள், போயு மக்களின் முன்னோடிகள் திபெத்தின் உட்பகுதிகளிலிருந்து வந்த யுத்தவீரர்கள் என்றும் திபெத்தின் எல்லைகளைக் காக்கும்படி அனுப்பப்பட்டவர்கள் என்றும் காட்டுகின்றன. ஆனால் இவர்கள் எல்லைகளில் பயிரிட்டு அங்கேயே தங்கிவிட்டனர்.

**பழக்கவழக்கங்கள்:** போயு மக்களின் பூப்பறிக்கும் திருவிழா இச்சிறு பகுதிக்கு மட்டுமே உரியத் தனித்தன்மை வாய்ந்த திருவிழா. இத்திருவிழா ஒவ்வொரு திங்களாண்டின் ஐந்தாவது மாதத்தின் ஐந்தாம் நாள் கொண்டாடப்படும். “மலைமேலுள்ள ஊற்றுத் தண்ணீரின்மேல் சூரிய வெளிச்சம் படும்முன் அதைக் குடித்தால் வியாதிகளின்றி வாழலாமென்பதும் அதில் குளித்தால் சகல தீமைகளிலிருந்து விலகி வாழலாமென்பதும் இவர்களுடைய நம்பிக்கை”

**மதம்:** பூப்பறிக்கும் திருவிழாவின்போது போயு மக்கள் லியன்ஷி (Lianzhi) என்ற தேவதையை வணங்குகின்றனர். இவர்களுடைய வழக்கத்திலுள்ள ஒரு கதையின்படி போயு மக்கள் ஆதி நாட்களில் மிகுந்த வறுமையில் வாழ்ந்தார்கள். இவர்களுடைய நிலையைப் பார்த்துப் பரிதாபப்பட்ட கடவுள்கள், சொர்க்கத்திலிருந்து லியன்ஷி என்ற இளம்பெண்ணை நிலத்தைப் பயிரிட, நூல் நூற்க மற்றும் துணி நெய்யக் கற்றுக்கொடுக்கும்படி அனுப்பிவைத்தனர். ஒரு வருடம் கடந்தபின், ஒருநாள் அவள் பூப்பறிக்கும்படி மலைக்குச் சென்றவள் திரும்பி வரவேயில்லை. ஜனங்கள் அவளுக்குப் பலி செலுத்தி பூக்களின் தேவதை என்று பெயரிட்டனர்.

**கிறிஸ்துவம்:** கிறிஸ்டியன் அண்ட் மிஷன் சொசைட்டி அலையன்ஸ் கி.பி. 1949 ற்கு முன் இவர்களுக்கு அருகாமையில் உள்ள மின் சியன் (Min Xian) பகுதியில் பணி செய்திருந்தாலும் இந்நாள்வரை போயு இனத்தவர்கள் மத்தியில் யாராகினும் இரட்சிக்கப்பட்டதாக எந்த ஒரு தகவலும் இல்லை. இங்குக் கி.பி.1889ல் முதலில் வந்த மிஷனரிகள் வில்லியம் கிறிஸ்டி (William Christie), W.W. சிம்ப்சன் (W.W. Simpson), ராபர்ட் எக்வல் (Robert Ekvall), கால்வின் ஸ்னிடர் (Calvin Snyder) மற்றும் வில்லியம் ரல் (William Ruhl) ஆவார்கள்.




**Population in China:**
3,000 (1997)
3,260 (2000)
4,200 (2010)
**Location:** Gansu
**Religion:** Polytheism
**Christians:** None Known

## மேலோட்டம்:

**மற்ற பெயர்கள்:** Boyu
**மக்கள்தொகை:** 3,000 (1997 AMO)
**மொழிப்பிரிவு:** சீன-திபெத்திய, திபெத்திய-பர்மிய, வகைப்படுத்தப்படாத மொழி
**மொழி வழக்குகள்:** 0
**மதம்:** புத்தமதம், ஆன்மாவாதம், பல தெய்வ வழிபாடு
**கிறிஸ்துவம்:** 0%
**வேதாகமம்:** இல்லை
**இயேசு திரைப்படம்:** இல்லை
**சுவிசேஷஒலிப்பதிவுகள்:** இல்லை
**கிறிஸ்தவ அலைபரப்புகள்:** இல்லை
ROPAL **குறியீடு :** இல்லை

**கிறிஸ்துவத்தின் நிலை**

